புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திருமதி கவிதா ராமு, இ.ஆ.ப.,

ந.க.எண்.2909/2016/ப2(வளர்ச்சி)

நாள்: 24.06.2022

பொருள்: பணியமைப்பு- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு- புதுக்கோட்டை மாவட்டம்- திரு கோ.தெ. கார்த்திகேயன் இளநிலை உதவியாளர்- உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகம்- கருணையடிப்படை பணி நியமனம்- பணிவரன்முறை செய்து உத்தரவிடல்.

பார்வை:
1.அரசாணை (நிலை) எண் 134, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள்: 22.10.1998 மற்றும் அரசாணை எண் 155, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யு-1)துறை நாள்:10.12.2014.
2.புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செ.மு.ந.க.ப2/2909/2016 (வளர்ச்சி) நாள்: 13.12.2017.
3.அரசாணை (நிலை) எண் 48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ-1)துறை நாள்: 26.02.2021.
4.அரசுக் கடிதம் எண். 6895/ ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ3)/துறை/ 2021 நாள்: 14.12.2021.
5.சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்கக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 20669/ 2022/ விசி 3-2 நாள்: 06.04.2022.
6.சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்கக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 5279/ 2017/டி2 நாள்: 03.06.2022.
7.தொடர்புடைய ஆவணங்கள்.

-0-

உத்தரவு:-

புதுக்கோட்டை மாவட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு, குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்த (லேட்) கோ.தெ.சரவணன் என்பவர் 05.12.2015இல் பணியிடைக் காலமானதைத் தொடர்ந்து, பார்வை 1-இல் காணும் அரசாணை மற்றும் இயக்குநரக கடிதத்தின்படி வாரிசுதாரராகிய சகோதரர் திரு கோ.தெ.கார்த்திகேயன் என்பவர் கருணையடிப்படை பணிநியமனம் வழங்கிடக் கோரி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் பார்வை 2இல் காணும் செயல்முறைகளின்படி, வாரிசுரிமை அடிப்படையில் சகோதரர் **திரு கோ.தெ. கார்த்திகேயன்** என்பவருக்கு இளநிலை உதவியாளராக திருமயம் ஊராட்சி ஒன்றியத்தில் பணிநியமனம் வழங்கப்பட்டு, தனியர் 14.12.2017 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து தற்போது பணியிட மாறுதலில் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

#Attested#
Assistant Director,
(Panchayats)
Pudukkottai.

அதனைத் தொடர்ந்து, பார்வை 3இல் காணும் அரசாணை மற்றும் பார்வை 4இல் காணும் கடிதத்தின்படி 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணிநியமனம் பெற்று எவ்வித விதித் தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders)

தேவைப்படாத பணியாளர்களின் பணி நியமனம் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே பணிவரன்முறை செய்திடலாம் எனத் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்தும், பார்வை 6இல் காணும் இயக்குநரக கடிதத்தின் பின்வரும் குறிப்பை தொடர்ந்தும்,

"the term near relative" includes unmarried brother/ unmarried sister of the unmarried deceased Government Servant who dies in harness while in service Appointments in such cases shall be given before they attain the age of 35 years on the date of his/ her unmarried brother/ unmarried sister and the appointing authorities should adhere to other conditions prescribed under the scheme and they should also ensure before giving employment assistance in such cases that the Applications are received within a period of three years from the date of death of Government Servant".

தனியர் இளநிலை உதவியாளராக பணியேற்பு செய்த 14.12.2017 முற்பகல் முதல் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்து இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1. தனியர் எவ்வித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில் உள்ளார் என்ற அடிப்படையில் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. விதி தளர்வு அல்லது விதி விலக்கு தேவையென பின்னர் தெரிய வந்தால் இவ்வாணை எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

2. தனியரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் எதுவும் தவறானவை எனத் தெரியவந்தால் விதிமுறைகளின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

# Attested #

Assistant Director,
(Panchayats)
Pudukkottai.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
புதுக்கோட்டை.

பெறுநர்
திரு கோ.தெ.கார்த்திகேயன்,
இளநிலை உதவியாளர்,
உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகம்,
புதுக்கோட்டை.

நகல்: ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை-15.

நகல்: உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) புதுக்கோட்டை.

நகல்: ப2- பிரிவு இருப்புக் கோப்பிற்கு

ஜிஎஸ்.